ஸ்ரீ:

ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேஸிகாய நம:

# ஆரண தேசிகனின் ஆயிரம் அறிவுரைகள்

(ஸ்ரீமதுபயவே. மஹாவித்வான். திருமலை சதுர்வேத சதக்ரது. நாவல்பாக்கம். ஸோமயாஜி அக்னிஹோத்ரம் நாராயண தாதயார்ய மஹாதேசிக ஸ்வாமியிடம் கேட்டறிந்து தொகுத்தவை)

தொகுப்பு: ஸ்ரீமதுபயவே. மஹாவித்வான். திருமலை சதுர்வேத சதக்ரது. நாவல்பாக்கம். யஜ்ஞவராஹ தாதயார்ய மஹாதேசிகன், மங்களகிரி

==========================================================================

## அறிவுரை 37. அஞ்சுக வீணர் குழுவுக்கு

अहेरिव गणात् भीतः सम्मानान्मरणादिव ।
कुणपादिव यः स्त्रीभ्यः तं देवा ब्राह्मणं विदुः ।।

அஹேரிவ கணாத் பீத: ஸம்மானான்மரணாதிவ ।
குணபாதிவ ய: ஸ்த்ரீப்ய: தம் தேவா ப்ராஹ்மணம் விது: ॥

இத்யாதிகளிற்படியே தேவர்களுக்கும் பஹுமான-விஷயனாம்.

- ரஹஸ்ய ரத்நாவளி ஹ்ருதயம்

மஹாபாரதத்திலிருந்து எடுத்த இந்த மேற்கோளுக்கு அர்த்தம்:

எவன் பாம்பிடம்போல் கூட்டத்திடம் பயப்படுகிறானோ, மரணத்திடம் போல் ஸம்மானத்திடம் பயப்படுகிறானோ, பிணத்திடம் போல் பெண்களிடம் பயந்து விலக்குகிறானோ, அவனைத் தேவர்களும் அந்தணனென்று கௌரவிக்கிறார்கள்.

ப்ரபந்நனுடைய வ்ருத்திக்கு ஒவ்வாதது குழுக்களும் கூட்டங்களும். விவிக்ததேசஸேவித்வம் அரதிர் ஜனஸம்ஸதி என்று கீதையிலும் சொன்ன விஷயம் இது.

*****************